# கூத்தராற்றுப்படையில் நிலவியல் பண்பாட்டுப் பதிவுகள்

*முனைவர் ச. பாரதி பிரகாஷ்*
தமிழ்த்துறை, சுயநிதிப் பிரிவு
பூ சா கோ கலை அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383210

**முன்னுரை**

*தமிழ் இலக்கியங்களில் நிலம் - பொழுது என்ற கூறுகள் சங்க காலம் முதல் புழக்கத்தில் உள்ளன. சங்க காலத்தைத் தொடர்ந்து எழுதப்பட்ட பெரும்பாலான இலக்கியங்களிலும் நிலமும் பொழுதும் தவிர்க்க இயலாத கூறுகளாக இடம் பெற்றுள்ளன. பிற இலக்கிய வகைகளை விட பயண இலக்கியங்களில் நிலம், பொழுது ஆகிய கூறுகளின் பதிவுகள் தனித்த இடம் பெறுகின்றன. இவ்விரண்டு கூறுகளும் இன்றைய ஆய்வுலகின் தவிர்க்க இயலாத சொல்லாடலாக உருவாகியுள்ள பண்பாட்டு நிலவியல் அல்லது நிலவியல் பண்பாடு என்பதோடு தொடர்பு உடையதாகும்.*

*ஆற்றுப்படைகளில் ஒன்றான கூத்தராற்றுப் படை, நிலவியல் சார்ந்த காட்சிகளை, காட்சித் தொகுப்பினை நுணுக்கமாகப் பல்வேறு இடங்களில் பதிவு செய்துள்ளது. புலவன், புரவலனைக் காண்பதற்காகச் செல்லும் வழியில் உள்ள நிலங்களின் இயல்பு, மக்களின் உணவு, உறைவிடம், பழக்கவழக்கம், பண்பாடு, உயிரினங்கள், தாவரங்கள் பற்றிய விவரிப்புகள் நிலவியல் நோக்கில் தவிர்க்க இயலாத இடம் பெறுபவை ஆகும். நிலமும் நிலம் சார்ந்த பொழுதும் ஒருவகையில் மக்களின் வாழ்க்கைமுறையைத் தீர்மானிக்கிறது என்பதை நாம் இதன் மூலம் உணர முடிகிறது. மேற்கண்ட செய்திகளின் அடிப்படையில் கூத்தராற்றுப் படையில் இடம் பெற்றுள்ள நிலவியல் சார்ந்த செய்திகளை அடிக்கோடிட்டுக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.*

*பயணம் மேற்கொள்ளும்கூத்தன், தான் செல்லும் இடங்களில் எல்லாம் தனக்குரிய நிலவெளிகளை தற்காலிக / நீண்ட கால நிலவெளியாக எண்ணிக் கொள்கிறான். இது புதிய பண்பாட்டு வெளியை கூத்தனுக்கு அறிமுகப் படுத்துகிறது. இல்லம் என்னும் நிரந்தர அடிப்படைப் பண்பாட்டு வெளியைப் போலவே, இல்லங்களால் உருவாக்கப் படும் தெருக்கள், தெருக்களால் உருவாக்கப் படும் ஊர்அல்லது நகரம், ஊர் மற்றும்நகரங்களைக் கொண்ட மாநிலம், மாநிலங்களின் தொகுதியான நாடு என ஒவ்வொன்றும் பண்பாட்டு வெளிகளாக மாறுகின்றன. நிரந்தரமான நிலவெளிகள், நிரந்தரமான பண்பாட்டு வெளிகளை உருவாக்கும்.* (https: // ramasamy writings.blog spot. com/ 2015/ 03/blog & post 24. html) *என்ற அ.ராமசாமி அவர்களின் கருத்தும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.*

**பண்பாடும் நிலவியலும்**

*ஒவ்வொரு மனித சமுதாயத்திற்கும் ஒரு பண்பாடு உண்டு. சமுதாயத்தில் வாழுகின்ற பெரும்பான்மையான மக்களின் ஒருமித்த நடத்தைகளையும் எண்ணங்களையும் அது வெளிப்படுத்தும். சமுதாயத்தில் உள்ள கலைகள், நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், மொழிகள், இலக்கியங்கள், விழுமியங்கள் முதலியன அந்தச் சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகள் எனப்படும். மக்களின் பண்பாட்டை, பொருள்சார் பண்பாடு, பொருள்சாராப் பண்பாடு என்று இருவகையாகப் பிரிக்கலாம். மக்கள் அவர்களின் தேவைகளுக்குச் செய்து கொள்ளும் அனைத்து வகையான பொருள்களும் பொருள்சார் பண்பாட்டில் அடங்கும். மக்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் கருவிகள்,*

*வீட்டுப்பொருள்கள், உடைகள், வேளாண்நிலங்கள், புதியஅறிவியல்கண்டுபிடிப்புகள்போன்றவை பொருள்சார் பண்பாட்டைச் சேர்ந்தவை. பொருள்சாராப் பண்பாட்டில் மக்களின் பழக்கவழக்கங்கள், நெறிமுறைகள், சிந்தனைகள், இலக்கியங்கள், கலைகள், உணவு உண்ணும் முறை, வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் போன்றவை இடம்பெறும். மேற்கண்ட பண்பாட்டு வளர்ச்சி நிலவியலை அடிப்படையாகக் கொண்டதே ஆகும்.*

**மலைபடுகடாம்**

*பத்துப்பாட்டில் ஐந்து நூல்கள் ஆற்றுப்படை நூல்கள் ஆகும். அதில், இரண்டாவது பெரிய நூல் மலைபடுகடாம். 583 அடிகளால் ஆன இந்நூலை இயற்றியவர், பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் ஆவார். இந்நூலின் பாட்டுடைத் தலைவன் நவிரமலையின் தலைவனான நன்னன் வேண்மான். கூத்தராற்றுப்படை என்ற வேறு பெயரும் இதற்கு உண்டு. நவிர மலையில் வாழ்ந்து வந்த மக்களின் வாழ்க்கை முறைகளையும் நன்னன் வேண்மானின் கொடைத் திறத்தையும் புகழ்ந்து பாடும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. சங்ககால இசைக் கருவிகள் (கஞ்சதாளம், கிணை, குழல், சிறுபறை, நெடுவங்கியம், மத்தளம், யாழ்) பற்றிய குறிப்புக்கள் ஆங்காங்கு காணப்படுகின்றன. நன்னனைப் பாடிப் பரிசு பெறச்செல்லுபவர்கள் செல்லும் பயணவழி, பயண அனுபவம் ஆங்காங்கு நேரும் நிலவியல் பண்பாடு அது சார்ந்த பதிவுகள் இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளன.*

**உணவும் விருந்தோம்பலும்**

*பண்டைத் தமிழர்கள் சுவை மிக்க உணவுப் பொருள்களைச் சமைப்பதில் தேர்ந்திருந்தனர். அவரவர் வாழ்ந்த நிலத்திற்கு ஏற்ப உணவு வேறுபட்டது. அவரவரின் பொருளாதார நிலைமையை ஒட்டியும் உணவில் தரம் வேறுபட்டிருக்கும் என்பதிலும் ஐயமில்லை. மரக்கறி உணவோடுபுலால் உணவும்பெரிதும் விரும்பி உண்ணப்பட்டது. மன்னர்கள் இரவலர் அளித்த விருந்துகளில் புலால் உணவே பரிமாறப்பட்டது என அறிகிறோம். (தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.121) என்ற அ. தட்சிணாமுர்த்தி அவர்களின் கருத்து தமிழர்களின் உணவு சார்ந்த பல்வேறு செய்திகளை நமக்கு விளக்குகிறது.*

*மலைபடுகடாமில் இடம் பெற்றுள்ள விருந்தோம்பல் நிலவியல் சார்ந்த சார்ந்த பண்பாடாகும். பொருள்சாராப் பண்பாட்டில் கீழ் வரும் மக்களின் பழக்கவழக்கங்கள், உணவு, உணவு தயாரிக்கும் முறை, உண்ணும் வழக்கம் ஆகியவை குறித்த பதிவுகள் இங்கு கவனம் பெறுகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நிலம் சார்ந்த விருந்தோம்பல் இங்கு கவனிக்கத்தக்கது. விருந்தினர்களை பூ மாலை அணிவித்து வரவேற்றல் (மலைபடு. 282 - 283), விருந்தினர்களுக்கு தங்குவதற்கு உரிய இடம்வழங்குதல் (மலைபடு.418-420), தேன், கிழங்கு, புலால் வழங்குதல் (மலைபடு. 152), விருந்தினர்களுக்கு இறைச்சி வகைகள் (மலைபடு. 175 - 178), மாங்காய் போட்ட மோர்க்குழம்பு (மலைபடு. 179), நெல்லரிசிச் சோறு (மலைபடு. 180), பழங்கள் (மலைபடு. 282) வாளை மீன் இறைச்சி உணவு (மலைபடு. 455), நெல்முளையால் தயாரிக்கப் பட்டகள் (மலைபடு. 464) என நீளும் விருந்துபசரிப்பு அந்தந்த நிலவியல் சார்ந்ததாகவே அமைவதை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது.*

**காந்தளும் கழுகும்**

*கூத்தன் செல்லுகின்ற வழியில் காந்தள் பூ பூத்திருந்தது. அதனைப் புலால்-கறித்துண்டு என்று கருதி எடுத்துச் சென்ற கழுகு உண்ணாமல் உதிர்த்தது. அக் காந்தள் பூக்கள் பெரிய பாறைகளில் விழுந்து நெருப்புப் பிழம்புகள் போலக் காட்சி அளித்தன. கீழே விழுந்த பூக்கள் மணம் பரப்பிக்கொண்டிருந்தன இதில் புலவுத் துண்டுகள் என்பதற்கு காந்தள் பூக்களைப் ஒப்புமைப் படுத்திய பாங்கு அவர்களின் நிலவியலையும் உணவுப் பண்பாட்டையும் தொடர்பு படுத்துவது போல அமைந்துள்ளது.*

இதனை,

***தீயின் அன்ன ஒண் செங்காந்தள் / தூவல் கலித்த புது முகை ஊன் செத்து***
***அறியாது எடுத்த புன் புற சேவல் /ஊஉன் அன்மையின் உண்ணாது உகுத்தென***
***நெருப்பின் அன்ன பல் இதழ் தாஅய்/வெறிக்களம் கடுக்கும் வியல் அறைதோறும்***
***மண இல் கமழும் மா மலை சாரல்***

***( கூத்த. 145 - 151)***

என்ற பாடல் அடிகளின் மூலம் அறியலாம். மேற்கண்ட சங்கப் பாடலின் மூலம் நிலவியல் சார்ந்த பண்பாட்டுப் பதிவுகளை காட்சிப் படுத்துவதில் அந்தந்த நிலத்தின் கரு, உரிப்பொருட்கள் அடிப்படைக் காரணிகளாகின்றன என்பதும் புனாகிறது. மலைகள், ஆறுகள் போன்ற இயற்கை அமைப்புகள் மிகத் தெளிவாக எல்லைவகுக்கும் தென்னிந்திய நிலத்தோற்றத்தின் பௌதிக அமைப்பு, தென்னிந்தியாவின் சிறிய அரசுகள், இன்னும் சிறிய குறுநிலத் தலைவர்கள் ஆண்ட சிறு பகுதிகள் ஆகியவற்றிற்கு இடம் தந்தது. அது மட்டுமல்லாமல் கவிதையையும் நிலவியல்பகுதிகளுக்கேற்பமலைப்பாங்கான நிலத்துக் கவிதை, மேய்ச்சல் நிலக் கவிதை, கடற்கரைப்பகுதிக் கவிதை என்பதுபோலப் பகுக்க வாய்ப்பளித்தது. (நில அமைப்பும் தமிழ்க் கவிதையும். ப. 3) என்ற செய்தியும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

## கானவர் சிறுகுடி

கூத்தன் செல்லும் வழியில் கானவர் சிறுகுடியினைக் காணலாம். அங்கு தேனும் கிழங்கும் பெறலாம். அங்குள்ள கானவர்கள் யானைத் தந்தத்தில் இருபுறமும் உறி கட்டி உணவுப்பண்ட வட்டில்களை (வட்டில் = கூடை) தம் இருப்பிடங்களுக்குச் சுமந்து சென்றனர். தேன், கிழங்கு, புலால் முதலானவை அவர்கள் சுமந்துசென்ற உணவுப் பொருள்கள். காட்டுப் பன்றியின் கறியும் அதில் இருந்தது. அந்த உணவுப் பொருள்களை அங்குச் சென்றவர் தம் சுற்றத்துடன் சேர்ந்து உண்ணும் அளவுக்கு அவர்கள் விருந்தாகப் படைப்பர் என்ற செய்தியை,

***தேனினர் கிழங்கினர் ஊன் ஆர் வட்டியர் /சிறு கண் பன்றி பழுதுளி போக்கி***
***பொருது தொலை யானை கோடு சீர் ஆக / தூவொடு மலிந்த காய கானவர்***
***செழும் பல் யாணர் சிறு குடி படினே***
***இரும் பேர் ஒக்கலொடு பதம் மிக பெறுகுவிர்***

***( கூத்த. 152 - 157)***

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன. மேற்கண்ட பாடலின் வழி அவர்களின் நிலவியல் சார்ந்த உணவும் அவை சார்ந்த குறிப்புகளும் காட்சிப் படுத்தப் படுகின்றன. இப்பாடலில் அவர்களின் விருந்தோம்பல் வழியாகவும் நிலவியல் பண்பாடு விவரிக்கப் படுகிறது.

## பூமாலை அணி

கானவர் வீட்டிற்குச் சென்றால் பல்வேறு வகையான இறைச்சி வகைகளோடு வேறு சில உணவுகளும் கிடைக்கும். கானவர், உங்களை மகிழ்விக்கப் பூ மாலை அணிவித்து விடுவார்கள். உங்களுக்கும் உங்கள் சுற்றத்தாருக்கும் நேர்ந்த உடல்துன்பம், உள்ள - உளைச்சலை நீக்கி விடுவார்கள். நீங்கள் அவர்களுக்கும் அவர்களது சுற்றத்தார்களுக்கும் இனியவர்களாக மாறி விடுவீர்கள். நீங்கள் உண்ணுவதற்குச் சுவையான பழங்களைத் தருவார்கள், என்ற செய்தி கானவர்களின் விருந்தோம்பலையும் அவர்களின் நிலவியல் பண்பாட்டுச் சிறப்பையும் விளக்குகிறது. இதனை,

**உண்டற்கு இனிய பழனும் கண்டோர் / மலைதற்கு இனிய பூவும் காட்டி**
***ஊறு நிரம்பிய ஆறு அவர் முந்துற / நும்மின் நெஞ்சத்து அவலம் வீட***
***இம்மென் கடும்போடு இனியிர் ஆகுவிர்***

***(கூத்த. 282-286)***

என்ற பாடல் அடிகளின் மூலம் நன்கு அறியலாம். இதில் தமது இல்லத்துக்கு வரும் விருந்தினர்களை மலர் மாலை அணிவித்து வரவேற்கும் பழக்கம்தான், இன்று சிறப்பு விருந்தினர்களுக்கு மாலை அணிவிக்கும் பண்பாடாக வளர்ந்துள்ளது என எண்ணத் தோன்றுகிறது. தமிழ்க் கவிதையில் சில

மரபுகள் மிகப் பழங்காலத்தின், மிகத் தொலைவானதொரு காலத்தின் எச்சங்களாக உள்ளன. அந்தக் காலத்தில் இயற்கையுடன் நேரடித் தொடர்பு இருந்தது என்றாலும், இயற்கைக்கும் மனித இனத்துக்குமான பரஸ்பர உறவில் மிக ஆழ்ந்த நம்பிக்கை ஏற்படாத காலம் அது எனலாம். உண்மையில் ஒருவித வாழ்க்கை முறையாக முன்னர் இருந்தவை பிறகு பழக்கமாக மாறிவிட்டன, பின்னர், அந்தப் பழக்கங்கள் உபயோகத்தில் இல்லாமல் போனபிறகும், மதிக்கப் பெறுகின்ற கவிதை மரபுகளாக மாறிவிட்டன. (நில அமைப்பும் தமிழ்க் கவிதையும், ப 19.) என்ற தனிநாயக அடிகளின் கருத்தும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

**நன்னனது மலை நாட்டில் பெறுவன**

தேன், தேறல், நறவு, தேங்காய், கடம்புமான் கறி, முள்ளம் பன்றிக் கறி, மாங்காய் போட்ட மோர்க்குழம்பு, நெல்லரிசிச் சோறு ஆகிய உணவுப் பொருட்களை வீடுதோறும் பெறலாம். இதனைச் சமைத்த குறமகள் தன் கூந்தலை உச்சிக் கொண்டையாகப் போட்டு முடிந்திருந்தாள். இந்த முச்சியில் மணம் கமழும் பூவைச் சூடியிருந்தாள். அவள் சமையலின் மணம் மலைச்சாரல் எல்லாம் கமழ்ந்தது. சோறு வெள்ளை வெளேரென்று மலர்ந்திருந்தது. தன் மக்களுக்கு இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம் என்று உண்ணும் கலங்களில் படைத்தாள். இவ்வாறு படைப்பதை ஒவ்வொரு மனையிலும் பெறுவீர்கள் என்று கூத்தன் ஆற்றுப் படுத்தும் பகுதியில் அம்மக்களின் விருந்தோம்பல் பண்புடன் அவர்களின் நிலவியல் சார்ந்த பண்பாட்டுப் பதிவுகளும் இடம் பெற்றுள்ளன.

இதனை,

***இன் புளி கலந்து மா மோர் ஆக / கழை வளர் நெல்லின் அரி உலை ஊழ்த்து வழை அமை சாரல் கமழ துழைஇ / நறு மலர் அணிந்த நாறு இரு முச்சி குறமகள் ஆக்கிய வால் அவிழ் வல்சி / அகம் மலி உவகை ஆர்வமொடு அளைஇ***
***மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்***

***(கூத்த. 179 - 185)***

என்ற பாடல் அடிகளின் மூலம் நன்கு அறியலாம்.

**கோவலர்களின் படுக்கை உபசரிப்பு**

கோவலர் மனைக்குச் சென்றால் அன்னத்தின் தூவி மயிரைத் திணித்துச் செய்தது போல இருக்கும் மெத்தையினைத் தருவார்கள். அது மான் தோலை உரித்து செம்மைப்படுத்திய தோல் விரிப்புப் படுக்கை ஆகும். தீப் பந்த வெளிச்சச் சூட்டுடன் நாம் சாயும் படுக்கையின் மீது இனிதே உறங்கிவிட்டுச் செல்லலாம் என அவர்களின் நிலவியல் சார்ந்த பொருட்களைக் கொண்டு அவர்களின் விருந்து உபசரிப்பு எவ்வாறு நடைபெற்றது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். இதனை

***துய் மயிர் அடக்கிய சேக்கை அன்ன***
***மெய் உரித்து இயற்றிய மிதி அதள் பள்ளி***
***தீ துணை ஆக சேந்தனிர் கழிமின்***

***(கூத்த. 418 - 420)***

என்ற பாடல் அடிகள் நன்கு விளக்குகின்றன. கூத்தனின் வாழுமிடம் (வீடு, ஊர், நகரம், நாடு) அவன் பரிசில் பெற செல்லும் இடம் ஆகிய இரண்டு மாறுபட்ட நிலவியலை பண்பாட்டுச் சிக்கலுடன் சேர்ந்து கூத்தனும் அவன் சுற்றத்தாரும் எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் என்பதே நிலவியல் பண்பாட்டுச் சிக்கலாக அடையாளம் காணப் படுகிறது.

கூத்தனின் வாழுமிடம் (ஊர், நகரம், நாடு) நிலையான நிலவெளியாக அமைகிறது. அது பற்றிய பதிவுகள் ஆற்றுப்படை நூல்களில் விரிவாக வருணிக்கப் படவில்லை. செல்லும் வழியில் கூத்தனும் அவன் சுற்றத்தாரும் தங்குமிடம் யாவும் தற்காலிகமான நில வெளிகளாக விளங்குகின்றன. தொடர்ந்து வெவ்வேறு தங்கும் இடங்களில் கூத்தன் பெறும் விருந்துபசரிப்பு பண்பாட்டுப் பதிவுகளாக அமைந்துள்ளன. இது போன்ற தற்காலிக நிலவியல் பண்பாடும் அது சார்ந்த செய்திகளும் விரிவான ஆய்வுக்கு உரியன. நிலவியல் சார்ந்த பண்பாட்டுப் பதிவுகளை காட்சிப் படுத்துவதில் அந்தந்த நிலத்தின் கரு, உரிப்

*பொருட்கள் அடிப்படைக் காரணிகளாகின்றன என்பதும் புனாகிறது. இவை போன்ற சமூக, அரசியல், பண்பாட்டுச் சித்திரிப்புகள் ஊர், நகரம், மாநிலம் என்ற எல்லை கடந்து நிலவியல் பண்பாட்டை உருவாக்கும் காரணிகளாக அமைகின்றன.*

**ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட நூல்கள்**

**தமிழ்**


1. *சுப்பிரமணியன், ச.வே. சங்க இலக்கியம் (மூலம் முழுவதும்) (2006), மணிவாசகர் வெளியீடு, சென்னை*
2. *ஞானபுஷ்பம் இரா (1990), தமிழில் பயண இலக்கியம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.*
3. *பூரணச்சந்திரன், க. (மொ), (2014), நிலஅமைப்பும் தமிழ்க் கவிதையும் (செவ்வியல் தமிழ்க்கவிதையில் இயற்கை பற்றியதோர் ஆய்வு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை.*
4. *மோகனா இரா. (2006), பயண இலக்கியம், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.*